**செ. கு. எண்: 001** **நாள்: 04.01.2020**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு.எடப்பாடி K. பழனிசாமி** அவர்களின்

அறிக்கை – 4.1.2020

நாமக்கல் மாவட்டம், குருசாமிபாளையம் கிராமத்தில் வசித்து வரும் திருமதி தனம் என்பருடைய வீட்டினுள், தருமபுரி மாவட்டத்தைச் சேர்ந்த சாமுவேல் என்பவர் நுழைந்து தகராறு செய்து, வீட்டிலிருந்த திருமதி தனம் என்பவரை தாக்கியதில் பலத்த காயமடைந்து சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியை அறிந்து நான் மிகுந்த வேதனை அடைந்தேன்.

இந்த சம்பவம் குறித்து தகவல் அறிந்தவுடன், இரவு ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்த புதுச்சத்திரம் காவல் நிலைய சிறப்பு உதவி ஆய்வாளர் திரு. முருகானந்தம் மற்றும் தலைமைக் காவலர் திரு. கார்த்திகேயன் ஆகிய இருவரும் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று, வீட்டினுள் இருந்த சாமுவேலை வெளியே வருமாறு கேட்டுக் கொண்டும், சாமுவேல் வெளியே வர மறுத்ததால், காவல் துறையினர் தங்கள் உயிரையும் பொருட்படுத்தாமல், திருமதி தனத்தை காப்பாற்றும் நோக்கில் கதவை திறந்து உள்ளே செல்ல முயன்ற போது, சிறப்பு உதவி ஆய்வாளர் திரு. முருகானந்தம், தலைமை காவலர் திரு. கார்த்திகேயன் மற்றும் பொது மக்கள் மீது சாமுவேல் ஆசிட் வீசியதில், காவலர்கள் பலத்த காயமும் பொது மக்கள் லேசான காயமடைந்தனர் என்ற செய்தி எனக்கு மிகுந்த வேதனையை அளித்தது.

காயமடைந்து, மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, உள்நோயாளியாக சிகிச்சை பெற்ற சிறப்பு உதவி ஆய்வாளர் திரு. முருகானந்தம் மற்றும் தலைமை காவலர் திரு. கார்த்திகேயன் ஆகியோரின் மருத்துவச் செலவு முழுவதையும் அரசே ஏற்கும்.

சிறப்பு உதவி ஆய்வாளர் திரு. முருகானந்தம், தலைமை காவலர் திரு. கார்த்திகேயன்:

பொதுமக்கள் திரு.குழந்தைவேல், திரு.பிரதீப், திரு.வெங்கடாசலம், திரு.நாகராஜ், திரு.பெரியசாமி, திரு.மணிகண்டன், திரு.கிருஷ்ணமூர்த்தி, திரு.மணிவேல், திரு.தமிழ்செல்வன், திரு.முத்துக்குமார், திரு.பெருமாள், திரு.ராமகிருஷ்ணன் மற்றும் திரு.தனசேகரன் ஆகியோர் தங்களது உயிரையும் பொருட்படுத்தாமல் துணிச்சலுடன் செயல்பட்டமைக்கு எனது மனமார்ந்த பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சிறப்பு உதவி ஆய்வாளர் திரு. முருகானந்தம் மற்றும் தலைமை காவலர் திரு.கார்த்திகேயன் ஆகியோரின் தீரச் செயலையும், கடமை உணர்வையும் பாராட்டுவதோடு, அவர்களை ஊக்குவிக்கும் வகையில், அவர்களுக்கு தலா ஒரு லட்சம் ரூபாயும் லேசான காயமடைந்த பொதுமக்கள் திரு.குழந்தைவேல், திரு.பிரதீப், திரு.வெங்கடாசலம், திரு.நாகராஜ், திரு.பெரியசாமி, திரு.மணிகண்டன், திரு.கிருஷ்ணமூர்த்தி, திரு.மணிவேல், திரு.தமிழ்செல்வன், திரு.முத்துக்குமார், திரு.பெருமாள், திரு.ராமகிருஷ்ணன் மற்றும் திரு.தனசேகரன் ஆகியோருக்கு தலா 25,000/- ரூபாயும் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**K.பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**